Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# தஞ்சையில் தோன்றிய நாட்டிய நாடகங்கள்

45

**முனைவர் செ.கற்பகம் & க.சுபத்ரா**
**இசைத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழகத்தின் தொன்மையான கலையாகக் கூத்துக்கலை விளங்கி வருகின்றது. மாமன்னர் இராசராசன் காலம் முதல் தஞ்சை மாநகரம் கலைவளர் நகரமாகவும், கலைகள் காப்பு நகரமாகவும் விளங்கி வருகின்றது. சோழர்களுக்குப் பின் வந்த நாயக்கர்கள் மராட்டியர்கள் இக்கலைகளை நன்கு பாதுகாத்து வளர்த்து வந்தனர். இவர்கள் காலத்தில் நாட்டியக் கலையில் தனி உருப்படிகள் மற்றும் கதையைத் தழுவி வரும் நாட்டிய நாடகங்கள் தோன்றின. இந்நாட்டிய நாடக படைப்புகள் காலந்தோறும் பல்வகை மாற்றங்களைப் பெற்று தமிழ் மொழியிலும் பிற மொழிகளிலும் படைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு சில நாட்டிய நாடகங்கள் இன்றும் அரங்கில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இவ்வாய்வின் மூலம் தஞ்சையில் உருவான நாட்டிய நாடகங்களை பற்றியும், அதன் சிறப்பியல்புகளைப் பற்றியும் இங்கு காண்போம்.

**நோக்கம்**

தஞ்சை ஓர் சிறந்த நாட்டிய பீடமாகத் திகழ்கிறது. இதில் தஞ்சையில் சேர, நாயக்கர், மராட்டியர் போன்றோர்கள் ஆட்சி செய்து இசை நாட்டியத்தை மிளிரச் செய்துள்ளனர். நாட்டியத்தில் கதை தழுவி வரும் மிக நெடிய பாடல்களை நாட்டிய நாடகம் என்று அழைக்கப்படுகிறது. இதில் தஞ்சையை சார்ந்த நாட்டிய நாடகம் உருவாக்கப்பட்ட அதன் சிறப்புத் தன்மையை வெளிப்படுத்துவது இந்த ஆய்வின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

தண்செய், விமானம், காந்தார, மரபு, மண்டபம், ஒத்திகை

**முன்னுரை**

மனித வரலாற்றில் கலைகள் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்று வருகின்றன. ஆயக் கலைகள் 64 என்பர். இக்கலைகளில் இசையும் நடனமும் குறிப்பிடத்தக்கனவாகும். இத்தகு கலைகளில் நாட்டியக் கலை வளர்ச்சியில் தஞ்சையினுடைய பங்களிப்பு மிகவும் சிறப்பான ஒன்றாகும். கதையைத் தழுவி வரும் நாட்டியம், நாட்டிய நாடகங்கள் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. தஞ்சையில் ஆட்சி புரிந்த நாயக்க மராட்டிய மன்னர்கள் எண்ணற்ற நாட்டிய நாடகங்களை உருவாக்கியுள்ளனர். இந்நாடகங்கள் குறவஞ்சி அமைப்பிலும், தொகுப்பு நாட்டிய நாடகங்களாகவும் சமயச் சார்புடைய நாட்டிய நாடகங்களாகவும் தஞ்சையில் வளர்ந்துள்ளன. இவற்றின் சிறப்பம்சங்களை இக்கட்டுரையில் காண்போம்.

**தஞ்சாவூர் பெயர்க்காரணம்**

தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று போற்றப்படும் தஞ்சாவூர் பழம்பெரும் நகரங்களின் ஒன்றானதாகும். நில அமைப்பு, தட்பவெப்பநிலை ஆகியன தஞ்சாவூர் எனும் பெயர் வந்ததற்குக் காரணம். கலைக்களஞ்சியத்தில் “தண்செய்” என்னும் சொல்லின் மறுவடிவம் தஞ்சாவூர் என்று கூறப்பட்டுள்ளன. பசுமை நிறைந்த சோலை என்றும், வயல் நிறைந்த பகுதி என்றும் பொருள் கொள்ளலாம்.

**தஞ்சையை ஆண்ட மன்னர்கள்**

தஞ்சையில் சோழர், நாயக்கர் மற்றும் மராட்டியர் ஆட்சி நிலவியது. இவர்கள் தஞ்சையில் கலை வளர்த்தப்பாங்கினைப்பின்வருமாறு காண்போம்.

**சோழராட்சியில் தஞ்சை**

இந்து மதத்தின் இரு கண்களாக விளங்கும் சைவமும் வைணவமும் செழித்து விளங்கும் நகரமாகத் தஞ்சை நகரம் விளங்குகிறது. இந்நகரம் பிற்கால சோழர்களின் தலைநகரமாக விளங்கியது. தஞ்சையில் விஜயாலய சோழன் தொடங்கி ஆதித்தன், பராந்தகன், கண்டராதித்தன், அரிஞ்செயன், சுந்தரச்சோழன், ஆதித்ய கரிகாலன், மதுராந்தகன், உத்தம சோழன், மாமன்னன் இராஜராஜன், இராஜேந்திரன் ஆட்சிச் செய்தார்கள். தஞ்சை தொடக்கக் காலம் முதல் சுமார் 170 ஆண்டுகள் பிற்கால சோழர்களின் தலைநகராக விளங்கியது.

**தளிச்சேரி**

தளிச்சேரிகள் ஆடற்பெண்களின் குடியிருப்புப் பகுதிகளாகக் கல்வெட்டில் சுட்டப்படுகின்றன. தாம் வாழும் இல்லங்களிலேயே மகளிர் ஆடல் பயின்றதை சிலப்பதிகாரமம் பரத்தையர் அவர்தம் சேரிகளில் ஆடல் பாடல் பயின்று நிகழ்ச்சிகளை நடத்தியதனை சங்க இலக்கியங்களும் குறிப்பிடுகின்றன. முதன் முதலில் சோழர் காலக் கல்வெட்டுகளில் இச்சொல் கையாளப்பட்டுள்ளது. தளி என்றால் கோவில் என்றும், சேரி என்பது குடியிருப்பு என்றும் பொருள் அமைவதால் தளிச்சேரி என்பதனை கோயிலைச்சார்ந்த குடியிருப்பு எனப்பொருள் கொள்ளலாம். முதலாம் இராசராசனின் தஞ்சாவூர் இராஜராஜீசுவரம் திருக்கோயிலின் வடக்குத் திருச்சுற்று மாளிகைச் சுவரின் வெளிப்புறத்தில் வெட்டப்பட்டிருக்கும் மிக நீண்ட கவ்வெட்டுகளுள் ஒன்று இத்திருக்கோயில் சார்ந்து அமைந்திருந்த தளிச்சேரி பெண்களைப்பற்றி எடுத்துரைக்கும் நிலையில் உள்ளன.[1]

**தஞ்சாவூர் கரணச் சிற்பங்கள்**

தஞ்சை இராஜராஜேச்சரம் கோயில் விமானத்தின் காந்தார அறையின் மேல் தளத் திருச்சுற்றில் 81 கரணச் சிற்பங்கள் உள்ளன. 108 கரணங்களுள் புஷ்பப்புடம் முதல் சர்பிதம் வரையிலான 81 கரணங்களே இராஜராஜேச்வரத்தில் வரிசையாகச் செதுக்கப் பட்டுள்ளன. சிவபெருமானே ஆடுவது போல இக்கரணங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கரணச்சிற்பத்திலுள்ள ஆண்வடிவம் நான்கு கைகளுடன் அமைந்துள்ளது.[2]

**கல்வெட்டுகள் கூறும் நாடகக் கூத்துகள்**

தஞ்சை இராஜேராஜேச்வரத்தில் காணப்படும் இராசேந்திரன் ஆறாம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு அக்கோயிலில் "இராஜராஜ்வர நாடகம் நிகழ்த்தப்பட்டதை தெரிவிக்கிறது. வைகாசி பெரிய திருவிழாவின் போது திருபாலன் திருமுதுகுன்றனான விஜய இராஜேந்திர ஆச்சார்யனால் இந்நாடகம் கோயிலில் நடிக்கப்பட்டதாகக் கூறும் கல்வெட்டு அதற்காக அவருக்கும் அவர்வழியினருக்கும் ஆண்டுதோறும் இராஜகேசரி ஆடல்வல்லான் எனும் மரக்காலால் நூற்றிருபது கலம் நெல் இறைவன் பண்டாரத்திடமிருந்து அளந்து தரப்பட்டதாகத் தெரிகிறது. கல்வெட்டு திருவாளன் திருமுதுகுன்றன் சாந்திக் கூத்தராக அழைக்கப்படுகிறது.

**நாடகக் கூத்தை உணர்த்தும் சோழர் சிற்பங்கள்**

நாடகமெனக் கருதுமாறு அமைந்த சிற்பத் தொகுதிகள் சிலவற்றை பொன்செய் நல்துணை ஈசுவரத்திலும், கொற்றமங்கலம் விஷ்ணு கோவிலிலும், திருச்சின்னம் பூண்டி திருச்சடைமுடிநாதர் திருக்கோயிலிலும் காணமுடிகிறது.

**நாயக்கராட்சியில் தஞ்சை**

தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்கள் காலத்தில் கி.பி.1532 முதல் 1675 வரை 133 ஆண்டுகள் தஞ்சை நாயக்கர்களின் தலைநகராக விளங்கியது. சேவப்ப நாயக்கர், அச்சுதப்ப நாயக்கர், இரகுநாத நாயக்கர், விஜயராகவ நாயக்கர், அழகிரி நாயக்கர், செங்கமலதாசு வரை சமயமும் கலையும் வளர்த்த தஞ்சை, நாயக்க மன்னர்களின் ஆட்சியில் இருந்தது.

**பாகவத மேளம்**

தஞ்சை நாயக்கர் கால அரிய கலைவடிவமாப் பாகவதமேளம் திகழ்கிறது. இது நாட்டிய நாடகவகையைச் சேர்ந்தது. இதனை பஜனை மரபின் நீட்சி அல்லது வளர்ச்சி எனலாம். கிருஷ்ண பக்தர்கள் பாகவதர்கள் என்று அழைக்கப்பட்டனர். 16ஆம் நூற்றாண்டின் இறுதியில் யட்சகான மரபு தமிழகத்தில் வேரூன்றியது. இது ஆந்திராவின் குச்சுப்புடியிலிருந்து தஞ்சைக்குக் குடிப்பெயர்ந்ததாகும். ஆந்திர பிராமணர்கள் அச்சுதப்ப நாயக்கர் காலத்தில் குச்சுப்புடியிலிருந்து தஞ்சை அருகே உள்ள மெலட்டூருக்கு வந்தனர்.[3] இவர்கள் பாகவத மேள நாடகம் என்னும் புதிய வகையான நாட்டிய நாடகங்களை அறிமுகம் செய்தனர். இந்நாடகங்கள் கோவிலின் சன்னதிகளில் மட்டும் நிகழ்த்தப் பெற்றன. இந்நாடகங்கள் புராண, இதிகாசங்களின் காணப்படும் பக்தி ததும்பும் கதைக்கருவினைக் கொண்டு விளங்கின. பாகவதர்கள் என்று அழைக்கப்படும் இறைத் தொண்டர்களால் தெலுங்கு மொழியில் நாடகங்கள் நடத்தப்பட்டன.[4] தஞ்சை மன்னர் அச்சுதப்ப நாயக்கர் மெலட்டூரில் 510 அந்தணர் குடும்பங்களை அமைத்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் வீடும் நிலமும் அளித்தார். இந்த நாடகங்களில் பிரகலாத சரித்திரம் முக்கியமாக இடம் பெறுகின்றது.

**மராட்டியராட்சியில் தஞ்சை**

தஞ்சையில் கி.பி.1675 முதல் கி.பி.1870 வரை மராட்டியர்கள் ஆட்சி நிலவியது. இக்காலத்தில் தஞ்சை தலைநகராக விளங்கியது. ஏகோஜி, சகஜி, முதலாம் சரபோஜி, துளஜா, பாபா சாகிப், சுஜான் பாய், பிரதாப சிம்மன், இரண்டாம் துளஜா, அமரசிம்மன், இரண்டாம் சரபோஜி, சிவாஜி, காமாட்சிபாய், சாகேப் ஆகியோர் வரை சுமார் 180 ஆண்டுகள் மராட்டியர்களின் ஆட்சி தஞ்சையில் நிலவின.[5]

**சகஜியின் நாட்டிய நாடகங்கள்**

சகஜி கிருஷ்ண பக்தியை வெளிப்படுத்தும் நிலையில் கிருஷ்ண லீலா விலாசம், ஜலக்கிரீடை, ருக்மணி சத்யபாமா சம்வாதம், திரௌபதி கல்யாணம், சதிபதி தான விலாசம், விஷ்ணு பல்லவி சேவாபிரபந்தம் என்ற நாட்டிய நாடகங்களை இயற்றியுள்ளார். [6]

**சீதா கல்யாணம்**

கலைகளின் தாயகமாக விளங்கும் பதி தஞ்சை மாவட்டமாகும். கலைகள் ஆலமரம் போல் தழைத்து வளர்ந்து பல பகுதிகளுக்கும் பரவின. இத்தகு சிறப்பு மிகுந்த கலைகளை இறைவனுக்கே அர்ப்பணித்து கலைச்சேவை புரிந்து வந்தனர். வெங்கட்ராம சாஸ்திரியால் இயற்றப்பட்ட இந்நூல் தஞ்சை சரஸ்வதி மகால் நூல்நிலையம் விஸ்வநாதன், சீனிவாசன் ஆகியோரைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு 1993ஆம் ஆண்டு சீதாகல்யாணம் வெளியிடப்பட்டது.[7]

**மார்க்கண்டேய நாடகம்**

பொன்னிக் கரையின் இருமருங்கிலும் பல சைவ வைணவ ஆலயங்கள் தோன்றி மக்களுக்கு பக்தியையும் பல்வேறு கலைகளையும் ஊட்டி வருகின்றன. இவற்றில் தஞ்சை மண் அனைத்துக் கலைகளுக்கும் நாயகமாக இன்றும் விளங்கி வருகின்றது. இலக்கியம், இசை, நாட்டியம், நாடகம், சிற்பம், ஓவியம் போன்ற பல நுண்கலைகளைக் கொண்ட கலைஞர்கள் வாழும் மண்ணாகவும் விளங்கி வருகின்றது.

மெலட்டூரில் நடிக்கப்பட்டுள்ள நாடகங்களில் மார்க்கண்டேய நாடகமும் ஒன்று. இந்நாடகம் 1995 ஆம் ஆணடு முதன்முதலில் வெளிவந்துள்ளது. இந்நாடகம் தொடர்பான மூன்று சுவடிகள் கிடைத்துள்ளன.

1. பத்மஸ்ரீ பாலு பாகவதர் அவர்களின் கிரந்த மொழியில் அமைந்த கையெழுத்து நோட்டுப்புத்தகம்
2. திருமதி கல்யாணியம்மாள் (பரதம் நடேசையரின் புதல்வி) அவர்களின் தமிழ் கையெழுத்து நோட்டுப்புத்தகம்
3. டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூலகத்தில் உள்ள கிரந்த எழுத்திலான ஓலைச்சுவடி, இச்சுவடி கல்யாணி அம்மாள் 1996ஆம் ஆண்டு ருக்மணி தேவி அருண்டேலிடம் அளித்த சுவடியாகும்.

இந்த மூன்று சுவடிகளையும் கொண்டு இந்த நூலை எஸ்.விசுவநாதன் அவர்களும், எல்.சீனிவாசன் அவர்களும் பதிப்பித்துள்ளனர்.

**'சங்கர சிவசம்போ ஸாம்ப கௌரீசா**
**பொங்கமுக புவினி பூஜிதுண்டைன**
**ஸுகுணுடைனட்டி ஶ்ரீஸு காவலெனு**
**தகனு முடுகு மாகு ததியம்பு காது"**

**(மார்க்கண்டேய சரித்திரம்)**

**ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்கள்**

- பூலோக தேவேந்திர விலாசம்
- சந்திரிகா ஹாஸை விலாசம்
- சகசி மன்னர் மீது குறவஞ்சி
- விஷ்ணு சாகராஜ விலாசம்
- காவேரி கல்யாணம்

இந்நாடகங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவையாகவும் அரியவையாகவும் கருதப்படுகின்றன. இவைகளில் சொற்சுவையும் பொருட்சுவையும் செறிந்துள்ளன. இவ்வைந்து நாடகங்களும் தஞ்சையை ஆண்ட சகஜி மன்னனையும் காவேரியையும் சிறப்பித்துக் கூறுகின்றன.

சிறந்த இராகங்களுடன் கூடிய பாடல்களாகவும் இவைகள் பெற்றுள்ளதால் மக்களின் மனம் இவற்றின் பால் ஈர்க்கப்படுகிறது. இவ்வைந்து நாடகங்களையும் வ.வேணுகோபாலன் அவர்கள் பதிப்பித்துள்ளார். இந்நாடகங்களில் மூன்று நாடகங்களுக்கும் விலாசம் என்ற பெயர் கொடுக்கப் பெற்றுள்ளது. பூலோக தேவேந்திர விலாசம், சந்திரிகா ஹாசை விலாசம் என்ற பெயரில் இடம் பெற்றுள்ளன. குறவஞ்சி நாடக அமைப்பில் சகசி மன்னரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது சகசி மன்னர் குறவஞ்சியாகும். [8]

**காவேரி கல்யாணம்**

காவேரி கல்யாணம் என்ற நாடகம் கல்யாணம் என்ற பெயரில் அமைந்துள்ளது. விலாசம், கல்யாணம் என்ற சொல், விசயம் சரிகை கல்யாணம் என்பன போன்ற பெயரமைப்பில் பழமை நாடகங்களுக்குப் பெயர் அமைக்கும் மரபு உள்ளது. விலாசம் என்பது நாடகப் பாட்டுடைத் தலைவனின் புகழ்களை விரித்து சிறப்பித்துக் கூறுவதாகும். காவேரிக்கும், கடலரசனுக்கும் திருமணம் நிகழ்வதாகக் கற்பனைச் சிறப்புடன் அமைந்தது காவேரி கல்யாணமாகும்.

**சகசி மன்னர் மீது குறவஞ்சி**

தமிழ் மரபு வழியே குறவஞ்சி என்ற பெயரில் சகசி மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகத் கொண்டு இயற்றப் பெற்றது சகசி குறவஞ்சி நாடகமாகும்.

ஐந்து தமிழ் நாடகங்களிலும் தொடக்கத்தில் தோடயமங்களம், விநாயகர் தரு வடமொழியில் உள்ளன. மங்கலம் என்ற பாடல் தெலுங்கு மொழியில் உள்ளது. நாடகத்தின் இறுதியில் சோபனப் பாடல் தமிழ்மொழியில் உள்ளது.

**தஞ்சை குறவஞ்சிகள்**

குறவஞ்சி என்கிற பெயரில் பாபநாச முதலியார் எழுதிய கும்பேசர் குறவஞ்சி முதல் குறவஞ்சி நூலாகத் திகழ்கின்றது. இந்நூலில் 14 பாடல்கள் உள்ளன. இவற்றுள் 45 பாடல்கள் இசை வடிவில் அமைந்த கீர்த்தனைப் பாடல்களாகும்.

- தஞ்சை வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி
- சந்திரசேகரக் குறவஞ்சி
- சரபேந்திர பூபாலக் குறவஞ்சி
- சரபோஜி ராஜன் குறவஞ்சி
- சகாஜிராஜன் குறவஞ்சி
- தஞ்சை குறவஞ்சி
- பிரகதீஸ்வரர் குறவஞ்சி
- ஷாஜி மன்னன் குறவஞ்சி
- மோகினி விலாசக் குறவஞ்சி
- தியாகேசர் குறவஞ்சி

**தமிழரசி குறவஞ்சி**

தஞ்சையில் எழுந்த குறவஞ்சி நூல்களுள் தமிழரசி குறவஞ்சியும் ஒன்று. இந்நூல் சித்திரை 1951 ஆம் ஆண்டு திருக்கோவலூராதீனம் திருப்பாதிரிப்புலையூர் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரியார் அடிகளாரின் சீரிய தலைமையில் நடைபெற்ற கரந்தை தமிழ்ச் சங்க வெள்ளி விழாவில் வெளியிடப்பட்டது.

**“உலகெலாம் புரவுதமி ழரசிகுற வஞ்சியென**
**துரைக்க டங்கி”**

**சரபேந்திர பூபாலக் குறவஞ்சி**

தஞ்சைக்குரிய குறவஞ்சிகளாக சந்திர சேகரக் குறவஞ்சி, சரபேந்திரபூபாலக் குறவஞ்சி, சரபோஜி ராஜன் குறவஞ்சி, சகஜிராஜன் குறவஞ்சி, தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி போன்ற நூல்கள் உள்ளன. இக்குறவஞ்சி சிவக்கொழுந்து தேசிகரால் இயற்றப்பட்டதாகும். [9]

**“பொருட் குறவஞ்சி நாட்டியம் அன்றிட இமயச் செய்வி**
**கருணை பெற்றுவந்த நாரிகணபதி காப்புத் தானே”**

**அஷ்டகோடி குறவஞ்சி**

தஞ்சை பெருவுடையார் ஆலயத்தில் இராஜராஜ நாடகமும் சரபேந்திர பூபாலக் குறவஞ்சியும் பல ஆண்டுகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டுள்ளன. 20 நாள் நடைபெறும் சித்திரைப் பெருவிழாவில் ஏழாம் நாள் விழாவில் இந்நாட்டிய நாடகம் முருகன் கோவில் மண்டபத்தில் சின்ன ஒத்திகை என்ற பெயரிலும் எட்டாம் நாள் விழாவில் கொடிமரம் அருகில்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

பெரிய ஒத்திகை என்ற பெயரிலும் ஒன்பதாம் நாளன்று நடராஜர் சன்னதி நேர் எதிரில் கோபுர வாயில்புற அருகில் உள்ள நாட்டிய மேடையில் முழு அலங்காரத்துடன் இந்நாட்டிய நாடகம் நடைபெற்றுள்ளது.

**"கட்டியக் காரன்வந் தானே – ஒய்யாரமாகக்**
**கட்டியக்காரன் வந்தானே"**

**பெத்தலேகம் குறவஞ்சி**

கடல் போல் அகன்றும் ஆழ்ந்தும் விளங்குகிற பெத்தலேகம் குறவஞ்சியின் ஆசிரியர் வேதநாயகம் சாஸ்திரியார் ஆவார். இவர் தஞ்சை கவிசேகர் கவிராயர் வேதநாயகம் சாஸ்திரியார் என்றே வழங்கப்படுகிறார். நூலின் பாயிரம் இவரை திருநெல்வேலி மேவும் செஞ்சொல் மகா ஞானக் கவிச்சக்கரவர்த்தி எனப் பாடிச் செல்கிறது.

**"சரணு திரிமுதல் சரணுவொடு பொருள்**
**சரணு சுதனவர் சரணு அருபியர்**
**சரணு குருபரர் சரணு அதிகயர்"**

**கும்பேசர் குறவஞ்சி**

கும்பேசர் குறவஞ்சி நாடகம் என்னும் இந்நூல் கும்பகோணத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீகும்பேசர் மீது குடந்தை பாபநாசம் முதலியோரால் இயற்றப்பட்டது. இடையிடையே வெண்பா, அகவல், விருத்தம், கொச்சகக் கலிப்பா, கட்டளைக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை முதலிய செய்யுட்களை விவரித்து கீர்த்தனை ரூபமாக அமைந்துள்ளது.[10] இந்த நாடகம் எளிய நடையில் சங்கீத அமைப்புக்கு ஏற்ப கீர்த்தனங்களையும் நாடக அமைப்புக்கேற்ப பாடல்களையும் கொண்டுள்ளது.

**தியாகேசர் குறவஞ்சியின் தோற்றம்**

திருவாரூர் கோயிலில் உள்ள தியாகராஜ சுவாமிகளைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது தியாகேசர் குறவஞ்சியாகும். இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. தியாகேசர் குறவஞ்சியிலுள்ள நான்கு பாடல்களைக் கொண்டு மராட்டிய மன்னன் இரண்டாம் சகஜி காலத்தில் இந்நூல் ஆசிரியர் வாழ்ந்ததாக ஊகிக்க முடிகிறது. தியாகேசர் குறவஞ்சியின் ஆசிரியரே நிர்ணயிப்பதற்காக போதிய அளவு ஆதாரங்கள் குறவஞ்சிப் பாடல்களிலோ சமகாலத்தில் இதர நூல்களிலோ கிடைக்கப் பெறாமையால் இக்குறவஞ்சியை இயற்றிய புலவர் இரண்டாம் சகஜி மன்னர் காலத்தவர் என்றும் திருவாரூர் தியாகேசர் சுவாமி மீது அளவு கடந்த பக்தி கொண்டவர் என்றும் தெரிய வருவதாக இக்குறவஞ்சியைப் பதிப்பித்த வே.பிரேமலதா அவர்கள் குறிப்பிட்டுள்ளார். "சிகரகிரி நிறைவசன முகநிகர்" எனத் தொடங்கும் குறத்தி தோன்றும் பாடல் சௌராட்டிரம் ராகம், மிஸ்ரசாபு தாளத்தில் அமைந்துள்ளது. பாடலுக்கு முன்பு தீர்மானமும் குறைப்பும் இடம்பெறுகிறது.

**"கங்கமழ் தண்புண்ச் சோலை சூழ்**

**காலை வசந்தம் பொற்தியாகர் மேல்"**

**தீர்மானம்**

**தத்த டின்கு டிங்குது கிடதக**
**டிங்குதோ குகுத டிங்கு தக**
**தகத டீங்கு டின்டின் குகுதக**
**டிங் குகுதா டிங்குதகிடதக**

**மோகினி விலாச குறவஞ்சி**

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களில் மிகச் சிறந்து விளங்கியவர் இரண்டாம் சாஜி. இவர் கி.பி.1684 முதல் கி.பி.1710 வரை 26 ஆண்டுகாலம் தஞ்சையை ஆட்சி செய்தார். இவரின் ஆட்சிக்காலத்தை ஒரு பொற்காலம் என்று கூறலாம். மோகினி விலாசக் குறவஞ்சி நூலின் ஆசிரியர் "சப்தரிஷி" இவர் இரண்டாம் சாஜியின் அவைக்களப் புலவர். திருச்சி மாவட்டம் லால்குடி மாவட்டத்தைச் சார்ந்தவராகக் கருதப்படுகிறது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவனான சப்தரிஷிஸ்வரனின் பெயரால் இவர் வழங்கப்பட்டார்.

**முடிவுரை**

தென்னிந்தியாவின் நெற்களஞ்சியமாகப் போற்றப்படும் தஞ்சை 'தண்செய்' என்றும் மறுவடிவமாகத் தோன்றியது. தஞ்சையில் சோழர், நாயக்கர், மராட்டியர் ஆட்சி செய்து இசை நடனக் கலையை நன்கு வளர்த்தனர். சோழர்கள் காலத்தில் 400 தளிச்சேரிப் பெண்கள் ஆடல் கலைக்காக பணி அமர்த்தப்பட்டனர். மேலும், 81 கரணச் சிற்பங்களை கொண்டு தஞ்சை பெரிய கோவில் விளங்கி வருகின்றது. நாயக்கர் காலத்தில் பாகவத மேளம் என்ற சிறப்பு பெற்ற நாட்டிய நாடகம் தஞ்சைக்கு அருகாமையில் நடத்தப்பட்டு வந்தது. தற்காலத்திலும் பாகவத மேளம் தஞ்சையை சுற்றியுள்ள கிராமங்களில் ஆடப்பட்டு வருகின்றது. மராட்டியர் காலத்தில் பல இயல், இசை புலவர்கள் நாட்டிய நாடகங்களை படைத்ததோடு அல்லாமல் மன்னரே குறவஞ்சி நாடகங்களையும் நாட்டிய நாடகளையும் படைக்கும் ஆற்றல் பெற்றவராக விளங்கினார். இதனால் தஞ்சை ஓர் சிறந்த நாட்டிய மையமாக விளங்கியதனை அறியமுடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

1. மு.நளினி., இரா.கலைக்கோவன், தளிச்சேரிக் கல்வெட்டு தலைக்கோல், சேகர் பதிப்பகம், சென்னை, 2004, ப.13.
2. இரா.கலைக்கோவன், சோழர் காலத்தில் ஆடல்கலை, அலமு பதிப்பகம், சென்னை, 2003, ப.68
3. இராமானுஜம்.சே.பேராசிரியர், (பதிப்.ஆ), தஞ்சைக் கூத்து மரபுகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2004,ப.45
4. கலாராணி.இரா., தஞ்சை வளர்த்த பரதக்கலை, ஜே.ஜே பப்ளிகேஷன்ஸ், மதுரை, 2004, ப.27

5. அறிவுடைநம்பி.ம.சா. முதுமுனைவர்., தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் (பகுதி 3), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2004, ப,110
6. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி-2, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், ப.272.
7. எஸ்.விஸ்வநாதன் (பதிப்.ஆ) சீதா கல்யாணம், (சீதா கல்யாணமு – சீதா கல்யாணம்), பாகதவ மேளா இசைநாட்டிய நாடகம் தஞ்சாவூர் மகாராஜா சரபோசியின் சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்,1993, முன்னுரை, vii
8. வெ.வேணுகோபாலன், (பதிப்.ஆ), ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்கள், பூலோக தேவேந்திர விலாசம். (ஐந்து தமிழிசை நாட்டிய நாடகங்கள், தஞ்சாவூர் மகாராசா சரபோசியின் சரசவதி மகால் நூலகம், தஞ்சாவூர், 1980, ப.43
9. கதிர்முருகு. டாக்டர் (பதிப்.ஆ) ஸ்ரீ சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம், சாரதா பதிப்பகம், சென்னை, 2001, முகவுரை, 2,3.
10. கல்யாணசுந்தரனார் (பதிப்.ஆ), கும்பேசர் குறவஞ்சி நாடகம், மகோபாத்யாய டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் நூல்நிலையம், சென்னை, 2005,ப.34.